**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 30.11.2020 திங்கட்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 30.11.2020

**மன்றப்பொருள்:-1**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கிருமிநாசினி தெளிக்க பயன்படுத்தப்படும் இந்நகராட்சிக்கு சொந்தமான LCV வாகனங்கள் TN-58 AS-3951, TN-58 AS-3893 மற்றும் TN-58 AS-3972–க்கு டயர்கள் பழுதடைந்துவிட்டதால் மேற்படி வாகனங்களை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, மேற்படி வாகனங்களுக்கு புதிய டயர்கள் வாங்க அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1867/2020/எச்.1)

---

**மன்றப்பொருள்: 2**

தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன்கீழ் மத்திய அரசின் MoUD (Ministry of urban Development) துறையினர் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (Star Rating) நட்சத்திர அங்கீகாரம் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக உசிலம்பட்டி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும், இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் Transportation செய்து முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, உசிலம்பட்டி நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) அறிவிக்க சுய உறுதி மொழிச்சான்று வழங்கவும், இப்பொருள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளை பெற நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1). உசிலம்பட்டி நகராட்சியை குப்பையில்லா நகராடசியாக (Garbage Free city) அறிவிக்க சுய உறுதிமொழி சான்றுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 1262/2017/எச்.1).

---

**மன்றப்பொருள்: 3**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு வாகன எண். டி.என்.58 பி.1272–இன் வாகன காப்பீடு 29.11.2020 உடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு 20.11.2020 முதல் 29.11.2020 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க கேட்புத்தொகை ரூ.19109/– யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1956/2020/எச்.1).

---

**<u>மன்றப்பொருள்: 4</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு வாகனம் டி.என்.58 பி.1272– இன் பிரேக் சென்டர் பழுதாகி விட்டதால் வாகனத்தை இயக்க முடியாத காரணத்தினால் பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி திரு. துரைப்பாண்டி ஓட்டுநர் தனது சொந்த செலவில் பழுதை சரிசெய்து அதற்கான இரசீதை இணைத்து செலவுத்தொகை ரூ. 2400/– வழங்க கோரியுள்ளார். எனவே, வாகன பழுதுக்கான செலவுத்தொகை ரூ. 2400/– திரு. அ.துரைப்பாண்டி ஓட்டுநர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி வாகன பழுது நீக்கம் செய்ததற்கு உரிய செலவுத்தொகை ரூ. 2400/– திரு. துரைப்பாண்டி ஓட்டுநர் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1956/2020/எச்1.)

---

**மன்றப்பொருள்:-5**

உசிலம்பட்டி நகராட்சி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணதொகை ரூ.92.95/–இலட்சம் நகராட்சி நிதி நிலைமை சரியல்லாத காரணத்தினால் இன்று வரை செலுத்தப்படாமல் கீழ்கண்டவாறு நிலுவையாகவே உள்ளது.

| வ.எ | விபரம் மற்றும் மின்இணைப்பு எண்: | | தேதி | தொகை |
|---|---|---|---|---|
| 1 | அணைப்பட்டி, உபமின் நிரேற்று நிலையம் | 250–011–560 | 11/2019 முதல் 15/06/2020 வரை | ரூ.1227168/– |
| 2 | எஸ்.மேட்டுப்பட்டி நிரேற்று நிலையம் | 059094500067 | 3/2020 முதல் 10/2020 வரை | ரூ.1017552/– |
| 3 | நகர்புற மின் இணைப்பு (OHT.STREET LIGHT AND OTHERS) | | 30/06/2020 முதல் 11/11/2020 வரை | ரூ.6168051 /– |
| 4 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ,மதுரை குடிநீர் கட்டண கேட்பு | | 09/2020 முதல் 10/2020 வரை | ரூ.883147/– |
| **மொத்தம்** | | | | **ரூ.9295918/–** |

இந்நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாய் ரூ.327.21 இலட்சம் ஆகும். இந்கராட்சியில் உள்ள அனைத்து பணியாளர்களின் ஊதிய செலவினம் மட்டும் ரூ. 343.93/– இலட்சம் ஆகும். இதனை தவிர குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, வாகன பராமரிப்பு, தனியார் துப்புரவு பணியாளர்கள் மற்றும் இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவு இதர செலவுகள் நகராட்சி வருவாய் மூலமே மேற்கொள்ளபட வேண்டியுள்ளது. இந்நிலையில் மின் கட்டண தொகையினை செலுத்த இயலாத காரியம் ஆகும். எனவே, நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு மின் கட்டணம் செலுத்த ஏதுவாக மான்யத்தொகை ரூ.92.95/– இலட்சம் வழங்கிட பரிந்துரை செய்ய கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களுக்கு கருத்து அனுப்பலாம் மன்றம் அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1).மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 1128/2018/இ1 நாள். 27.11.2020

---

**மன்றப்பொருள்:-6**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான LCV வாகனங்களுக்கு 3 எண்ணம் டயர்கள் கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுப்பப்படுகிறது.

| | | டயர் (1) | டியூப் (1) |
|---|---|---|---|
| 1 | M/s. Sree Varsan Tyres உசிலம்பட்டி | 2500 | 350 |
| 2 | M/s. Ranjin Tyres தேனி ரோடு, கோச்சடை, மதுரை | 2650 | 450 |
| 3 | M/s. ARIES Tyres மேலூர் ரோடு, மதுரை | 2600 | 400 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. Sree Varsan Tyres உசிலம்பட்டி நிறுவனத்திடமிருந்து 3 எண்ணம் டயர்கள் (155/80 D12) செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1867/2020/எச்.1)

---

**மன்றப்பொருள்:-7**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பேரையூர் சாலையில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடர் மேலாண்மை துறை சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். NC1(4)/1875/2020., நாள் 26.08.2020–இன்படியும், மாவட்ட ஆட்சியர் மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும் ஓடைகளில் அடைப்பு ஏற்பட்டுள்ளதை ஜே.சி.பி. வாகனம் மூலம் சுத்தம் செய்யவும் அதற்காகும் உதேச செலவினத்தொகை ரூ.2 5000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஓடையை சுத்தம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அவவர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 165/2020/எச்.1)

---

**மன்றப்பொருள்:-8**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு வாகன எண். டி.என்.58 பி.–1272–க்கு தகுதிச்சான்று 17.03.2020–ஆம் தேதி உடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று கோவிட்–19 காரணமாக தற்போது வரை புதுப்பிக்காமல் உள்ளது. எனவே, தகுதிச்சான்று புதுப்பிக்க பழுது பணிகள் பார்க்கவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 78,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி வாகனத்தின் பழுது பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1843/2020/எச்.1)

---

**மன்றப்பொருள்:-9**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பொதுச்சுகாதார பிரிவு வாகக எண். டி.என்.58 பி.1272–இன் தகுதி சான்று 17.03.2020 உடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க பழுது பணிகள் பார்க்க ஆகும் உத்தேச செலவினத்தொகைக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s. பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், கம்பம் ரோடு, பெரியகுளம் | 74222 (வரிகள் உட்பட) |
| 2 | M/s. ஸ்ரீ சிவபாலாஜி ஆட்டோ மொபைல்ஸ், கோச்சடை, மதுரை | 87300 (வரிகள் உட்பட) |
| 2 | M/s. K.M.S. மோட்டார்ஸ், திண்டுக்கல் | 91100 (வரிகள் உட்பட) |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ் பெரியகுளம் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1843/2020/எச்.1)

**மன்றப்பொருள்:-10**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரையூர் சாலையில் உள்ள ஓடையில் ஜே.சி.பி. வாகனம் மூலம் சுத்தம் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு

| வ.எ. | நிறுவனத்தின் பெயர் | வாடகை ( 1 மணி நேரத்திற்கு) | ஓட்டுநர் படி (1 நாளுக்கு) |
|---|---|---|---|
| 1 | M/s. வைகை எர்த் மூவர்ஸ், தேனி ரோடு, உசிலம்பட்டி | ரூ. 1000 | ரூ.500 |
| 2 | M/s. கள்ளழகர் எர்த்மூவர்ஸ், பேரையூர் ரோடு, உசிலம்பட்டி | ரூ. 1100 | ரூ. 600 |
| 2 | M/s. ஸ்ரீமாசாணம் எர்த் மூவர்ஸ், பேரையூர். | ரூ. 1200 | ரூ. 650 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. வைகை எர்த் மூவர்ஸ் தேனி ரோடு, உசிலம்பட்டி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி ஓடைகளை சுத்தம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 165/2020/எச்.1)

---

**மன்றப்பொருள்:-11**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2020–2021–ஆம் ஆண்டுக்கு கீழ்காணும் விபரப்படி எழுதுபொருட்கள் படிவங்கள் பதிவேடுகள் தேவைப்படுகிறது.

| வ.எண். | பொருட்களின் விபரம் |
|---|---|
| 1 | Payment Book |
| 2 | PF Cash Book |
| 3 | Cheque Register |
| 4 | PF Register |
| 5 | PF Abstract Register |
| 6 | கட்டிடம் அனுமதி உரிமம் வழங்கும் பதிவேடு |
| 7 | கட்டிட மனுக்கள் வருகை பதிவேடு |
| 8 | தீர்மான பதிவேடு |

| | |
|---|---|
| 9 | தன் பதிவேடு 100 பக்கம் கொண்டது |
| 10 | அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு |
| 11 | துப்புரவு பணியாளர்கள் வருகை பதிவேடு |
| 12 | பகிர்மான பதிவேடு |
| 13 | பைல் பேடு |
| 14 | கோப்பு மூடுதாள் |
| 15 | ஆபீஸ் கவர் சிறியது |
| 16 | ஏ4 வெள்ளை பேப்பர் |
| 17 | Revenue Fund Chitta வருவாய் நிதி பதிவேடு |
| 18 | சொத்துவரி பெயர் மாற்றம் பதிவேடு |

மேற்படி பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.50,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). எழுதுபொருட்கள் படிவங்கள், பதிவேடுகள், அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்.1)

---

**மன்றப்பொருள்:-12**

இந்நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் குடும்பங்களின் விபரங்கள் அடங்கிய காப்பீட்டுத்திட்டம் சேர்ப்பு படிவத்தினை 14838 பக்கங்கள் எண்ணிக்கையில் கணினியிலிருந்து பிரிண்டிங் செய்து வாங்குவதற்கு ஒரு பக்கத்திற்கு உத்தேச மதிப்பு தொகை ரூ.1.40/—த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). காப்பீட்டுத்திட்டத்தின் சேர்ப்பு படிவத்தில் அவசர அவசியம் கருதி பிரிண்டிங் செய்து வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

---

<u>மன்றப்பொருள்: 13</u>

இந்நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் குடும்பங்களின் விபரங்கள் அடங்கிய காப்பீட்டுத்திட்டம் சேர்ப்பு படிவத்தினை கணினியிலிருந்து பிரிண்டிங் செய்து வாங்குவதற்கு ஒரு பக்கத்திற்கு ரூ. 1.40 1—ற்கு 6.11.2020—இல் மன்ற அனுமதி பெற்றதின் அடிப்படையில் 06.11.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1). SHARP OFFSET PRINTERS - ரூ. 1.50—க்கு

88, Avanimoola vedhi, Madurai.

1). DEVA OFFSET PRINTERS - ரூ. 1.30–க்கு
9, Alagarkovil main road, K.Pudur,

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Deva Offset Printers Alagarmain road K.Pudur, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

**1).** மன்றம் அனுமதிக்கலாம்.

**2).** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள DEVA OFFSET PRINTERS அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர் ,
உசிலம்பட்டி நகராட்சி